'பெரியார் அறிவுலக'த்தைப் பயன்படுத்தி

இளைஞர்கள் - மாணவர்கள் தங்களது அறிவுத்திறனை வளர்த்திட வேண்டும்!

நூலகத்தைப் பார்வையிட்ட பின் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பேட்டி!



கோவையில் 'பெரியார் அறிவுல'கத்தைப் பார்வையிட்ட பின் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோது எடுத்த படம்.

கோவை, நவ. 6 -

கோவையில் 'திராவிட மாடல்' ஆட்சியில் கட்டப்பட்ட 'பெரியார் அறிவுலக'த்தை பார்வையிட்ட கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி யில், "மாணவர்கள் - இளைஞர்கள் 'பெரியார் அறிவுலக'த்தைப் பயன் படுத்தி தங்களது அறிவுத்திறனை வளர்த்திட வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார்.

கோவையில் நேற்று முன்தினம் (4.11.2026), திராவிடர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற "பெரியார் அறிவுலகம் கண்ட திராவிட நாயகருக்கு நன்றி பாராட்டு விழா" நிகழ்வில் பங்கெடுப்பதற்காகச் சென்றிருந்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, மாவட்டக் கழகத்தின் சார்பில் உற்சாக வரவேற்பு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, கழகத் தலைவர் அவர்கள் கோவை மாவட்டக் கழகப் புதிய அலுவலகக் கட்டடப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

பின்னர், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் அய்யா அவர்களுடன் பெரியார் அறிவுலகத்தைப் பார்வையிட்ட பின் கழகத் தலைவர் அவர்கள் செய்தியாளர்களைச் சந்தித்து அளித்த பேட்டி வருமாறு :-

கேள்வி: *உங்கள் கனவுத் திட்டம் எப்படி வந்திருக்கிறது?*

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்: திராவிட மாடல் அரசின் கனவுத் திட்டமான தந்தை பெரியார் பெயரில் அமைந்திருக்கும் இந்த அறிவுலகத்தை, ஏற்கனவே நான் பார்த்திருந்தாலும், அது முழுமையடைந்து திறந்து வைக்கப்பட்டதற்குப் பிறகு, இன்று நம்முடைய அய்யா ஆசிரியர் அவர்களோடு பார்க்கும் ஒரு அரிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

அதிகம் கூட்டம் இருந்த காரணத்தால், நாங்கள் பொறுமையாக அனைத்தையும் பார்க்க முடியாத ஒரு சூழ்நிலை. அதனால், இன்னொரு முறை நிச்சயமாக இதை முழுமையாக பார்க்க வேண்டும் என்ற ஆசை என்னுடைய உள்ளத்தில் தோன்றியிருக்கிறது.

எனவே, இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, இன்றைக்கு தமிழ் நாடு போய்க் கொண்டிருக்கும் ஒரு சூழ்நிலையில், திராவிட இயக்கம் என்றால் என்ன? திராவிடம் என்றால் என்ன? தந்தை பெரியாரின் உணர்வுகள் என்ன? அவருடைய லட்சியங்கள் என்ன? என்பதை அறிந்து கொள்ள, இளைஞர்கள், மாணவர்கள் இதை நல்ல வகையில் வந்து பார்த்து, உங்களுடைய அறிவுத் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற என்னுடைய அன்பான வேண்டுகோளை, இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி: *இனி தமிழ்நாட்டில் இதுபோன்ற நூலகங்கள் வர வாய்ப்பிருக்கிறதா?*

மு.க.ஸ்டாலின்: ஏற்கனவே தி.மு.க. ஆட்சியில்தான் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, கோட்டூர்புரத்தில் அண்ணா நூற்றாண்டு நூலகத்தை உருவாக்கினார்.

இதுபோன்று மற்ற நூலகங்களும் வரவேண்டும்!

அதற்குப் பிறகு, தமிழ்நாட்டில் என்னுடைய தலைமையில் திராவிட மாடல் ஆட்சி அமைந்த தற்குப் பிறகு, மதுரையில் கலைஞர் பெயரால் நூற்றாண்டு நூலகம் அமைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, நெல்லையில் காயிதே மில்லத் பெயரால் ஒரு நூலகம் அமைக்கப்பட உத்தரவிடப்பட்டிருக்கிறது. திருச்சியில் பெருந்தலைவர் காமராஜர் பெயரில் நூலகம் அமைப் பதற்கான பணிகள் ஓரளவு நடந்து முடிந்திருக்கிறது. விரைவில் திறக்கப்படும் என்று நான் கருதுகிறேன்.

கோவையில் தந்தை பெரியார் பெயரில் அமைந்திருக்கும் இந்த நூலகத்தைப் பொறுத்த வரைக்கும், 99 சதவீதப் பணிகள் முடிந்துவிட்டது. ஒருவேளை, பாதியில் இருந்தால், இதற்கும் இந்த அரசு மூடுவிழா நடத்தியிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. நல்லவேளை இது தப்பித்திருக்கிறது. அதேபோன்று மற்ற நூலகங்களும் வர வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தை உங்கள் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.

இதுதான் 'தூய சக்தி' ஆட்சியின் மாற்றமா? வெளி மாநில

காற்பரேட் நிறுவனங்களுக்கு ரூ.18 ஆயிரம் கோடி டெண்டர்!

சிறு ஒப்பந்ததாரர்களை புறக்கணிப்பதா?

சங்க நிர்வாகிகள் குற்றச்சாட்டு!

தூத்துக்குடி, நவ. 6 -

சிறு ஒப்பந்ததாரர்களைப் புறக்கணித்து கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ரூ.18,000 கோடி டெண்டர் வழங்கியுள்ளதாக ஒப்பந்ததாரர்கள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

தமிழ்நாடு பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை ஒப்பந்ததாரர்கள் சங்கத்தின் மதுரை மண்டலக் கூட்டம், தூத்துக்குடியில் நடைபெற்றது. மண்டலத் தலைவர் கருப்பசாமி தலைமை வகித்தார். இதில் 100க்கும் மேற்பட்ட ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டனர்.

பின்னர் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் சுரேஷ்குமார், நிருபர்களிடம் கூறியதாவது :-

கடந்த மாதம் 16ம் தேதி முதன்மைத் தலைமைப் பொறியாளர் செந்தில் வெளியிட்ட புதிய அரசாணை ஒப்பந்ததாரர்களைப் பாதிக்கும் வகையில் உள்ளது. இதில் ஒப்பந்ததாரர்களின் வகுப்புகள் நான்காகக் குறைக்கப்பட்டுள்ளன. முதல் வகுப்பு ஒப்பந்ததாரர்கள் ரூ.1.50 கோடி வங்கி உத்தரவாதம் செலுத்த வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை சிறு ஒப்பந்ததாரர்களின் வாழ்வாதாரத்தைப் பாதித்து, கார்ப்பரேட் நிறுவனங்கள் மட்டுமே பயனடையும் சூழலை ஏற்படுத்தும். த.வெ.க. ஆட்சிக்கு வந்ததும் புதிய மாற்றம் ஏற்படும் என எதிர்பார்த்தோம். ஆனால், ஆட்சிப் பொறுப்பேற்ற 15 நாட்களிலேயே சுமார் 4,000 உள்ளூர் ஒப்பந்ததாரர்களைப் புறக்கணித்து, எல் அண்ட் டி போன்ற பெரு நிறுவனங்களுக்கு ரூ.18,000 கோடி மதிப்பிலான ஒப்பந்தங்கள் த.வெ.க. அரசால் வழங்கப்பட்டு உள்ளன.

மாநில அளவில் போராட்டம்!

ஊழலற்ற ஆட்சி எனக் கூறும் தமிழக அரசு, ஒப்பந்ததாரர்களைப் பாதிக்கும் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வது வேதனையளிக்கிறது. தமிழகத்தில் சுமார் 4,000 ஒப்பந்ததாரர்கள், அவர்களைச் சார்ந்த 40,000 குடும்பங்கள் மற்றும் 4 லட்சம் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் இத்துறையை நம்பியுள்ளது.

எனவே நிலுவையில் உள்ள ஒப்பந்தப் பணிகளுக்கான தொகையை அரசு விரைந்து வழங்க வேண்டும். சிறு ஒப்பந்ததாரர்களைப் பாதிக்கும் புதிய அரசாணையை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும். இல்லையெனில், ஒப்பந்ததாரர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க மாநிலம் தழுவிய அளவில் பெரிய போராட்டங்களை நடத்த வேண்டிய நிலை ஏற்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.



மறைந்த முன்னாள் ஒரத்தநாடு சட்டமன்ற உறுப்பினர் எம்.ராமச்சந்திரன் அவர்களது திருவுருவப் படத்திற்கு கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்கள் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். உடன் தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, தஞ்சை தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் தி.பழனிவேல், பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் கா.அண்ணாதுரை, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராஜமாணிக்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம், மாநகர செயலாளர் சண்.ராமநாதன், ஒன்றியக் கழக செயலாளர்கள் அருளானந்தசாமி, செல்வகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; 'முறைகேடா பணம் திரட்ட என்னவெல்லாம் வழி இருக்குன்னு 'விசில்' பார்ட்டி களிடம் தான் முறையா 'கேட்லாக்' வாங்கி படிக்கணும்னு ஒரு பத்திரிகையிலே வந்திருக்கே பார்த்திங்களா? உண்மையா இருக்குமா?

பட்டணம் : **ஆமாமய்யா; நானும் படிச்சேன். 'உளவாளி' சொன்னா ஓரளவு உண்மை இருக்கும். இந்த லட்சணத்திலேதான் 'தூயசக்தி' ன்னு மார் தட்டிக்கிறாங்க!**